உ

கடவுள் துணை.

கலியுகச்சிந்து.

கடன்பத்திரம்

கலிகாலக்கண்ணாடி.

இம்மூன்றும் அடங்கியிருக்கின்றன.



இவை-சி-முனிசாமிமுதலியாரியற்றியதை

சென்னை-புரசை

சுந்தரவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1896.

உ

கடவுள் துணை.

கலியுகச்சிந்து.

நாதநாமக்கிரியை-ஆதிதாளம்-பல்லவி.

காலத்தைப்பாராய்—கலிகாலக்கொடுமையின்
கோலத்தைக்கேளாய்,

அநுபல்லவி.

காலத்தின்கோலத்தை ஞாலத்தின்மேலோத
பாலொத்தமொழியாளே வேலொத்தவிழியாளே (கால)

சரணங்கள்.

அரிசிப்படிரெண்டு பணமாய்முழிக்குது
ஐயையோயேழைகள் புழுகாய்துடிக்குது
வரியெல்லாம்கலைக்குமேல் வாரண்டாய்திரியுது
வாங்கினகடனுக்குதான் கோர்ட்டுக்கிழுக்குது
புலம்புதேகுடிகள் புரட்டாசைப்பிறகூட புளுக்குதேவெய்யல்
நாட்டுப்புறங்களெல்லாம் ஓட்டம்பிடிக்குது
நஞ்சைபுஞ்சைகளெல்லாம் பஞ்சாய்பறக்குது
காடுமேடுகளெல்லாம் கட்டுதிட்டமாச்சு
காக்கைக்குருவிகூட பிழைப்பதரிதாய்போச்சு (கால)

மழையோமழையோவென்று மானம்பார்க்கலாச்சு
மாடுஆடுகள்பேச்சி புல்லுக்கலையலாச்சு
தரையும்உலர்ந்துபோச்சு தண்ணீர்பன்னீராச்சு
தங்கத்தைவைத்தாலும் வட்டிகேழ்க்கலாச்சு
முறைகெட்டுபோச்சி தாயார்தமக்கைபோலே பெண்தேடலாச்சு
கொண்டமனைவிபேச்சி கூழுக்கலையலாச்சு
கூத்தியார்பாதத்தைக் காத்துயிருக்கலாச்சு
சொந்தபடிப்பெல்லாம் சூத்துக்குமணையாச்சு
சொல்லுமிங்கிலீஷுக்கு நல்லபிழைப்பாச்சு (கால)

காட்டில்மழையாச்சி கழனிவுலர்ந்துபோச்சு
கலப்பைதாத்துக்கோலை யிரப்பில்சொருகலாச்சு
போட்டவிரைகளெல்லாம் பொரியாய்பறந்துபோச்சு
பிள்ளைகுட்டிகளெல்லாம் கஞ்சிக்கலையலாச்சு
மண்மாரியாச்சு நாட்டுப்புறங்களெல்லாம் கண்மாரியாச்சு
யிருந்தவிரைகளெல்லாம் யேனோவிரைத்தோமென்று
யிரவும்பகலுமாக முறையிட்டிருக்கும்போது

எங்கெடுவாயிதா பிடிபிடி ஆளொன்று
ஏழெட்டுப்பேருக் வீட்டைவளைந்துகொண்டு

ஜப்திகளாச்சி ஆடுமாடுகளெல்லாம் யேலமாய்ப்போச்சி

வீட்டுவரிவந்து வாசக்கால் தூக்குது
வியாபாரவரிவந்து சாமானைவளைக்குது
குப்பைவரிவந்து குடிசையைப்பிடிக்குது
கொளுத்தும்விளக்குவரி கழுத்தைப்பிடிக்குது

வேடிக்கையாச்சி கட்டுமுட்டுகளெல்லாம் வியாபாரமாச்சி

களிதின்றுபிழைக்கவும் கேவுறுமனாக்குது
கம்புசோளங்கள்கூட வம்புகள்செய்யுது
கூலிக்குப்போனாலும் லஞ்சங்கள்கேழ்க்குது
கொடுத்தாலும்நாலாநாள் அடித்துத்துரத்துது(கால)

சீமைசெட்டிகளெல்லாம் சிறிப்பாய்சிறித்துப்போச்சு
சமுசாரிதாசியும் வேஷம்ஒன்றாய்ப்போச்சி
பெருமையாய்பிழைத்தவர் பிழைப்புக்கும்பிழைப்பாச்சி
பொய்சாட்சிசொல்வோர்க்கு கைமேல்காசியாச்சு

கடைகெட்டுப்போச்சி சர்வகுலங்களும் நடைதப்பிப்போச்சு

அந்தணர்குலத்துட ஆசாரம்போச்சுது
அவரவர்சாஸ்திரம் பரணைமேற்றூங்குது
பணமொன்றுப்பிணங்கூட வாய்கொஞ்சந்திரக்குது
படிப்பில்லாதவர்பேச்சி வேலைக்கித்தொங்குது(கால)

தாய்போலமாதரை சேயர்கள்புணரலாச்சு
தம்பித்தமயனென்ற அன்புவிலகிப்போச்சு
நாய்போலேவிலைமாதர் யெங்கும்பெருத்துப்போச்சு
நாயகனிரந்தோரும் சேய்பெறுங்காலாச்சு

கலைகெட்டுப்போச்சு பணமேபெருமையாச்சு ஜாதிகள்போச்சு

பலந்தவுத்தியோகத்தைப் பார்க்கவிருப்பமாச்சு
படித்தோருங்கடுங்கொழி லபித்துப்பிழைக்கலாச்சு
கலங்கிவேலையரெல்லாம் கண்ணீர்சொரியலாச்சு
கட்டினமனைவிசொல் விட்டுப்பிழைக்கலாச்சு

வளிகெட்டுப்போச்சு தகப்பன்பின்னையுங்கூட வழக்காடலாச்சு

பூமியிற்பிழைப்பதற்கு காவியுடுத்தலாச்சு
பூர்ணமாய்கெஞ்சாசும் அடித்துமயங்கலாச்சு
சாமியென்றவருக்குப் போர்கள்நிகளமாச்சு
சாம்பலைப்பூசவுந் தெரியாதவர்க்குச்சீச்சீ(கால)

கடுகடுத்துப்பெற்றத் தாயையுதைக்கலாச்சு
கட்டினமனைவிசொல் தட்டாதிருக்கலாச்சு

கொடுத்தர்கடனைக்கேட்டால் கோட்டுக்கிழுக்கலாச்சு
கொஞ்சமெளியோரானால் பஞ்சாயடிக்கலாச்சு
அஞ்சாமல்போச்சிபெரியோர்சிறியோரென்றஅளவெல்லாம்போச்சு
பெண்கேள்வியாபாரஞ் செய்துபிழைக்கலாச்சு
புருஷன்வெளுக்கக்கட்டி பிளைத்திரிபலாச்சு
சண்டைசாடிகளெல்லாம் பணத்தையிறைக்கலாச்சு
சாமிக்குக்கொடுப்பவர் தரணியில்மருந்தாச்சு(கால)
பஞ்சாங்கப்படிப்பெல்லாம் பஞ்சாய்ப்பறந்துபோச்சு
பறைச்சிக்குபணைந்தந்து சிரப்பாய்நடக்கலாச்சு
அஞ்சாமற்பரச்சோய்றில் ஆனேவோருமவிழலாச்சு
அவர்கள்மனைவியெல்லாம் அழுதுபுலம்பலாச்சு
குலங்கெட்டுப்போச்சு அறிவிலாதவருலே குடிகெட்டுப்போச்சு
தலைக்குப்பின்நோக்காமல் டொப்பிசட்டைகளாச்சு
ஜோடுஞ்செருப்பும்போச்சு பூட்சுதூக்கலாச்சு
அடுப்பங்கரையிற்கூட யிங்கிலீஷ்பேசலாச்சு
அந்தணர்குடிக்கவே அடிக்கொருகடையாச்சு
சீமைதுரைகளெல்லாம் காவியுடுத்தலாச்சு
சாதித்தமிழரெல்லாம் சட்டைமாட்டலாச்சு
காலந்தலைக்கீழாச்சு கருப்புங்குடியாய்ப்போச்சு
கண்டவிடங்களெல்லாம் பைபிலிரைச்சலாச்சு
வேதங்கள்போச்சி கிறிஸ்தவர்கூச்சலே வேடிக்கையாச்சு
கோயில்குளங்களெல்லாம் குட்டிச்சுவராய்போச்சு
குடியரதிகமாச்சு கடைகள்பெருத்துபோச்சு
கிராமதேவிகளெல்லாம் கடையாய்ப்பறந்துபோச்சி
கண்டவிடத்தில்வாந்தி பேதியதிகமாச்சி(கால)
கலியுகநடத்தைக்கு கடவுளுஞ்சிரிக்குது
காலத்திற்கேத்தாப்போல் மாரிகள்வருகுது
குளிருகாச்சலிற்பாதி கூண்டோடேசாய்க்குது
குந்தியிருந்தபேரை வாந்தியில்மடக்குது
பேதியிற்பாதி யிப்படிமடிந்தாலும் துள்ளுதேகூவி ஐயோ
இன்றைக்கிருப்பவர் காலைக்கில்லையென்று
யார்க்குந்தெரியுமிந்த வூர்க்குந்தெரியுமிது
ஏனோகெருவங்கொண்டு வீணாகமடியுது
எண்ணிப்பார்த்தால்தினம் ஆயிரஞ்சாயுது (கால)
பணங்கையில்வருதென்று பொய்சாட்சிசொல்லாதே
பரிதேசியேழைமேற் புலிபோலேதுள்ளாதே
முழுவேஷம்போட்டுநீ மோசங்கள்செய்யாதே
மூச்சிவெளியேபோனால் சீச்சீபிணமாச்சே
கெருவங்கொள்ளாதே நிலையில்லாகழுதைநீ கெட்டுப்போகாதே

ஊற்றையுடலைநம்பி ஒதிபோலேநிகளாதே
ஊனைப்பகைத்துக்கொண்டு வேறுடன்மாளாதே
காற்றைமலைந்துக்கொண்டு கருமங்கள்தேடாதே
கலியுகச்சிந்தைநீ பருநாகச்சொல்லாதே(காவ)

கலியுகச்சிந்து - முற்றிற்று.

கும்மி.

அண்ணனுக்குத்தம்பி துரோகஞ்செய்யுங்காலம் அப்பனைப்பிள்ளையுதைக்குங்காலம், பண்ணினநன்றிமறக்குங்காலம் பழிபாவத்துக்கேற்றகலிகாலம். 1

புருஷனைப்பெண்டுதைக்குங்காலம்- பெற்றப் பெண்ணைத்தகப்பன் புணருங்காலம், தருமநெறியைமறக்குங்காலம் கெட்டதருதலைக்கேற்றகலிகாலம். 2

தங்கையைஅண்ணன் தொடருங்காலம் ஐயா தாயைபொருந்துமடியுங்காலம் மங்கைக்குமஞ்சளரைக்குங்காலம் கெட்டமானமில்லாத கலிகாலம், 3

கொண்டபுருஷனைத்திட்டுங்காலம் இவள்கூலிகொடுத்துப்புகழுங்காலம் முண்டைகள்பிள்ளைபெருகுங்காலம் ஐயா மோசமில்லாத கலிகாலம். 4

கட்டினமாதுஅலையுங்காலமிவன் காவியுடுத்தித்திரியுங்காலம், புட்டிபுட்டியாய்குடிக்குங்காலமையா புளுகருக்கேற்றகலிகாலம். 5

பேயும்பேயெல்லாம் படித்துவிட்டுமெவர்பிழைக்கசீவனமில்லாமல், கையேந்திபூரிகள் வாங்கிப்பிழைக்கிறார் கலியுகக்காலமிதுவல்லவோ. 6

விக்கிரமாதித்தனையிலுந்தர்மவேதநெறிகளன்காலத்திலும்அக்கிரமமிப்படிகேட்டதில்லையையோஅந்தணர்த்தியோகஞ்செய்ததில்லை

சொந்தபுருஷனைத்திட்டுங்காலமிவள்சொல்லாமற்றுப்பிவிடும்போகுங்காலம், கணவன்மனைவியை யழைக்கவந்தாலவனைக் கண்டபடியாகத்திட்டுங்காலம். 8

கள்ளத்தனமாய் புணர்ந்தபிள்ளைசெத்துக் கண்டவிடத்திலெறிந்துவிட்டு, நல்லசமுசாரிபோலேமினுக்கியே நாட்டை கெடுக்குங்கலிகாலம். 9

புருஷனைப்பெண்சாதி திட்டுங்காலமையா புருஷன்றலையைக்குனியுங்காலம், கணவனைச்சாட்சியாய் வைத்துக்கொண்டு யிவள் கருத்தைப்போலே நடக்குங்காலம். 10

சொந்தபெண்சாதிக்குப் பயந்துவிட்டு மிவன் சொல்லாமல்வெயிலிலேலறுங்காலம், போனாலும்போகிறாளென்றுசொல்லியிவள் பெற்றுவளர்க்குங்கலிகாலம். 11

பொய்யானபத்திரமெழுதுங்காலஞ்சாட்சி பூட்டியே கோட்டில்
கெலிக்குங்காலம், தெய்வமொருவனைத் திருடுங்காலமிது தீவினைக்க
ஞ்சாக்கலிகாலம். 12

அருமைபதியாமுராட்டிக்காலமிது கர்மியைப்போற்றுந்திருட்டு
க்காலம், திருமணவூர்முனிசாமிசொல்வாக்கியம் சோதித்துப்பார்கலி
காலகுணம். 13

குமிப்பாட்டுகள்-முற்றிற்று.

நொண்டிச் சிந்து.

ஆறுமாதக்கடன்காரர்-அவருக்கு-அண்ணனென்று உரைக்கலா
ம்மாறுபாடிகள்-தாருமாறுக்காயலார்கள் ஊரெங்குந்தானுய்வலியவ
க்துகடன்கொடுத்து பத்துக்குஅஞ்சிவட்டியாம் அந்த பத்திரமெழு
த்துக்கூலியதுவேறேவாம், தருமத்தின்காசிவேறேவாம் இப்படி தந்
திரமாயேழைகள் வாயிலடித்து தட்டுமுட்டுதவலைசொம்பு பெட்டி
முதல் தந்ததெல்லாம்வட்டிமட்டும் வலித்துக்கொண்டு, வாயிலொரு
கணக்குரைப்பார் கணக்கிலே-வாங்கியவருநாளைப்போலே எழுதிடு
வார் பணத்தைக்கொடுத்தனுப்புவார் வாங்கினவன் பாதிவழிபோகு
முன்னே சம்மனெடுப்பார். (தந்தினதன)

இப்படியிவர்களெழுவாம்-நாட்டுகளில்- பீட்டிக்காரர் கோருவதை
கேட்கப்பயமாம் சைதாபேட்டைதூண்டுகளையும் வைகுண்ட சல்லா
ப்போல்கந்தைகளை வாரிக்கொண்டு வலைபோல்புடவைகளையுங்கவை
க்குதவா-டாமேறிதுண்டுதுண்டாய்கிழித்துக்கொண்டு செம்மண்ணு
ம்பகுடர்களும்-கல்லு-சேறுபோலே குழைத்துதோய்த்துகொண்டு க
ஞ்சியிலேபோட்டுபிழிந்து கந்தைகளை கருவாடுபோலுலர்த்திமடித்
துக்கொண்டு-நாட்டுபுரங்காடுமேடெல்லாம் கும்பலாய்நாலைந்துபே
ருகநுழைந்திடுவார் கெல்லூரு வேஷ்டிகளென்பார் நூலெல்லாம்நே
ருக்கமைசாயம் போகாதென்பார் மதுரைப்புடைவைகளென்பார் இ
துமாட்டுத்தோலை போலிருக்கும் கிழியாதென்பார் - கடனுக்குதரு
வோமென்பார் நித்தியம் காலனுவிழுக்காடுகொடுக்கவென்பார், தெ
ரியாமல்கடனெடுத்தால்-தெருவு வாசப்படியில்படுத்தூகாநிமுழிவார்
கொடுத்தகடனைக்கேட்பார் அவர் குந்தினயிடத்தைவிட்டு அசைய
மாட்டார்-குனியங்கள்வைப்போமெனபார் ஆடுமாடுகருணடியும்யே
லம்தோ செய்குரோமெனபார். (தந்தினதன)

கடன் பத்திரம்.

உலகமறியாத ஒருவருக்காணுதமீ ஒருநாளுமில்லாததேதி
யில் ஊரில்லாதவூரிலிருக்குந் தலைக்காய்ந்த தாண்டவராய முதலியார்

குமாரன் சனியனைப்பிடித்த சாப்பசதாசிவமுதலியாருக்கு சரிப்படாத ஊரிலிருக்கும் பித்தம்பிடித்த பேயாண்டிசெட்டியார் குமாரன்பேரில்லாதவன்பிரட்டி எழுதிக்கொடுத்த குறுவையில்லாத கடன்பத்திரமாவதென்னவென்றால் இப்பவும் என்னுடையவீட்டிற்கு கிழக்கு அவனுடையவீட்டிற்கு மேற்கு, அவனுடையவீட்டிற்கு வடக்கு, இவனுடையவீட்டிற்குத் தெற்கு, இந்த நாற்பாங்கெல்லைக் குட்பட நிச்சயித்து சென்னபட்டணம் சிலாமணிராசி கும்பினி ரூ 500 இந்த ரூபாய் ஐந்நூற்றுக்கு மாதம் 1 க்கு ரூ 100 - க்கு வட்டி ரூ 1 ஆக ஏறின வட்டியுமுதலும் தாங்கள்வேண்டாதபோது கொடுக்காமற்போகக் கடவேனாகவும் ஒருசமயம் அப்படிக்குக் கொடுக்கும்படிக்கு அர்ப்பியக்தப்பட்டால் தாங்கள் எந்தகோட்டிலாவது போட்டு கோர்ட்டுச் செலவில்லாமல் அசல் பூஜியமாய் போகக்கடவிராகவும் இந்தப்படிக்கு என்னுடைய மனோராஜியிற்சம்மதித்துஎழுதிக்கொடுத்த குறுவையில்லாத கடன்பத்திரம்.

இதற்குசாட்சி இவனோஅவனோ எழுதினவனெவனோ கைஎழுத்து.

நடுவீதிநாராயணன்.

கலிகாலக்கண்ணாடி.

தகப்பனுக்குமகனுழவு பழக்குங்காலம்
தமயனுக்குதம்பிபுத்தி சொல்லுங்காலம்
குருக்களிருந்தாசனத்தி லிருக்குங்காலம்
கொடுத்தகடன்கேட்பவரை யுதைக்குங்காலம்
வலக்கைபிடித்தராசாணி சுற்றிவந்த
மாப்பிள்ளையைமருந்திட்டுக் கொல்லுங்காலம்
கணக்கருக்குஅடிவழக்கு பேசுங்காலம்
கலிகாலமாமிந்த காலந்தானே (௧)

வாய்வேகமாகரெயில் ஓடுங்காலம்
வாய்பேச்சுதந்திவழி பேசுங்காலம்
தாய்பேச்சுபிள்ளைகட்கு விஷமாங்காலம்
தன்மனைவிமனைதின்போல் கடக்குங்காலம்
நாய்போலவிலைமாதர் பெருத்தகாலம்
காதலெனுமனையாளை வணங்குங்காலம்
கலிகாலமாமிந்த காலந்தானே (௨)

மாமனையேமருமகனும் புணருங்காலம்
மாமியார்மருமகனை மருவுங்காலம்
பெற்றவளும்பிள்ளைகளைச் சேருங்காலம்
பெண்ணாளுந்தகப்பனையே பிணையுங்காலம்
தன்மனைவிதிலோத்தமைபோ லிருக்குங்காலம்

தழையர்களுஞ்சந்தசங்காய் திரியுங்காலம்
காமமெனுங்கருங்கடலில் மூழ்குங்காலம்
கலிகாலமாமிந்த காலந்தானே (௪)

சக்கையற்றுத்திண்ணைமேல் உட்காருங்காலம்
சமுசாரியென்றபேர் நீளுங்காலம்
கொள்கைதனைக்காட்டியே அழைக்குங்காலம்
கொழுந்துடன் ஆசைவைத்து பேசுங்காலம்
பட்டிகளைப்போன்பெண் டாளுங்காலம்
பாலகனைப்பெற்று தாலாட்டுங்காலம்
களிப்புடனேஉடப்பிறப்பை துடருங்காலம்
கலிகாலமாமிந்த காலந்தானே (௫)

கணவனையேமத்ராலே அடிக்கலாச்சு
களிப்புடனேதாய்வீடு சேரலாச்சு
பெண்ணவளுந்தாய்வீடு போகலாச்சு
பெற்றவருங்கூடியே கொடுக்கலாச்சு
களிப்புடனேகூட்டியே கொடுக்கலாச்சு
கலிகாலமாமிந்த காலந்தானே (௬)

அவுசாரிவுலகத்தில் அனேகமாச்சு
அன்னநடைதாசிகட்கு பிழைப்பும்போச்சு
புவிமீதில்கவிவாணர் பிழைப்பும்போச்சு
புத்தியில்லாமடையருக்கே காலமாச்சு
பருவப்பெண்பாட்டுகளும் பாடலாச்சு
பழுத்தகிழமாய்ப்பிள்ளையை, பூசலாச்சு
சுற்றவரைக்கல்லாதார் இகழலாச்சு
கலிகாலமாமிந்த காலந்தானே (௭)

பிள்ளைபெற்று ஆற்றோரம் போடலாச்சு
புருஷனடித்தால்விரைவாய்ப் பிடிக்கலாச்சு
முண்டைகளும்புருஷனையே தேடலாச்சு
முகமினுக்கிகண்டபடி திரியலாச்சு
ஆண்டைவீட்டுமன்னர்களை கெடுக்கலாச்சு
அடுத்தவரை அன்றைக்கே கொல்லலாச்சு
தொண்டைக்குமினுக்கெண்ணை பூசலாச்சு
கொழுந்தனுக்கு பிள்ளைபெற்று வளர்க்கலாச்சு
கன்னியர்கள்கண்டவரை சேரலாச்சு
கலிகாலமாமிந்த காலந்தானே (௮)

கலிகாலக்கண்ணாடி-முற்றிற்று.